# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1990, செப்தெம்பர் 26 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ஆட்சினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1990 செப்தெம்பர் மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.00

**1990 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கை துறைமுக அதிகார சபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம்**

[1990, செப்தெம்பர் 26 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. ஒ.—04/89

**இலங்கைத் துறைமுக அதிகார சபையினுல் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களும், ஓய்வூதியமொன்று வழங்கப்பெறுவதற்குத் தகைமைபெறுதவர்களுமான கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவின் ஊழியர்கள் ஓய்வூதியமொன்று வழங்கப்பெறத் தகவுடையவராவதை இயலச்செய்வதற்கு சிறப்பேற்பாடு செய்வதற்கும், அதனேடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

துறைமுக அதிகாரசபையினுல் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களும் இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் ஓய்வூதியத்திற்குத் தகவற்றவர்களுமான கொழும்பு துறைமுக ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்.

2. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் ஓர் ஓய்வூதியத்தைப் பெறுகின்ற ஆளாக இல்லாதவரும், அவரது சேவை கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவிலான சேவைக்காலப்பகுதியுடன் சேர்க்கப்படும்போது பத்து ஆண்டுகளாகவோ அதற்கு மேற்படவோ இருப்பவரும், கொழும்புத் துறைமுக ஆணைக்குழுவில் அவரது நிலையான பதவி ஓய்வூதியங்கள்பற்றிய குறிப்புக்களின்கீழ் ஓய்வூதியத்திற்குரியதென வெளிப்படுத்தப்பட்டுள்ளவருமான (இதனகத்துப்பின்னர் "துறைமுக அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் ஒவ்வோர் அலுவலரும் அல்லது சேவையாளரும் இயைபான சேவைக்காலப் பகுதிக்கு அத்தகைய பதவியை வகித்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய காலப்பகுதியின் முடிவில் ஓய்வூதியங்கள்பற்றிய குறிப்புக்களின்கீழ் ஓய்வூதியமொன்று வழங்கப்பெறுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

இப்பிரிவு எந்த ஆளுக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அந்த ஓர் ஆள் தொடர்பில் "இயைபான சேவைக் காலப்பகுதி" என்பது துறைமுக அதிகாரசபையின் பணியாட்டொகுதியில் ஒரு பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதிக்குப்பின்னர் கொழும்பு துறைமுக ஆணைக்குழுவில் அவர் தொடர்ந்து இருந்திருந்தால் அதனகத்து பத்தாண்டு ஓய்வூதியத்திற்குரிய சேவையைப் பூர்த்திசெய்வதற்கு அத்தகைய ஆள் அதனகத்துச் சேவை செய்திருக்கவேண்டிய காலப்பகுதி எனப் பொருள்படும்.

2—ඊ 007583 —1,175 (01/90)

தீர்த்தளிப்புச் செய்யப்படு முன்னர் திருப்திசெய்யப் படவேண்டிய நிபந்தனைகள்.

3. இரண்டாம் பிரிவின்கீழ் ஓர் ஓய்வூதியம் வழங்கப்பெறுவதற்கு தகவுடையவராகவரும் ஒவ்வோர் ஆளும்—

(அ) துறைமுக அதிகாரசபையில் நிரந்தர ஊழியத்தை அவர் ஏற்பதன்மீது, அவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணிக்கொடையின், அவரால் அல்லது அவரின் மரபுரிமையாளர்களினால், ஓய்வூதியப் பணிப்பாளருக்கு செய்யப்படவேண்டிய மீளளிப்புக்கு அமைவாக ;

(ஆ) அத்தகைய ஆள் எத்தேதியன்று துறைமுக அதிகாரசபையினால் தொழிலுக்கமர்த்தப்பட்டாரோ அத்தேதியன்று தொடங்கி, இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் ஓர் ஓய்வூதியத்தை வழங்கப் பெறுவதற்கு அவர் தகவுடையவராக வரும் அல்லது வந்த தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு அத்தகைய ஆள் தொடர்பில் துறைமுக அதிகாரசபையினால் ஊழியர் சகாய நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட எல்லா உதவுதொகைகளின், தொழில் ஆணையாளரினால் அல்லது ஊழியர் சகாய நிதியத்துக்கான தனது உதவுதொகையை அத்தகைய ஆள் பெற்றுள்ளவிடத்து, அந்த ஆளினால் அல்லது அவரது மரபுரிமையாளர்களினால் திறைசேரிக்குச் செய்யப்படவேண்டிய மீளளிப்புக்கு அமைவாக,

அத்தகைய ஓய்வூதியத்தைப் பெறுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.